விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 011 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 15 திங்கட்கிழமை (30.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு உயிராபத்துக்கள் இல்லை

### பாதுகாப்பை மேலும் குறைக்க அரசு திட்டம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் கிடையாது என்ற புலனாய்வு அறிக்கையின் பின்னரே அவர்களுக்கான பாதுகாப்புக் குறைக்கப்பட்டது.

அடுத்தபுலனாய்வு அறிக்கை கிடைத்த பின்னர் தற்போது வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு மேலும் குறைக்கப்படலாம் என அமைச்சர் கிருஷாந்த அபேசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் 15

## அநுரவின் வழி தனிவழியல்ல நான் பயணித்த அதே வழி

### முன்னாள் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எனது பாதையிலேயே பயணிக்கின்றார். அவருக்கு எனது வாழ்த்துக்கள் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம 15

## மீசாலையில் நகைத் திருட்டு

### இருவருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மீசாலையில் வீடு புகுந்து திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரும், திருடிய பொருட்களை வாங்கிய குற்றச்சாட்டில் கைதான நபரும் 16

## போக்குவரத்து விதிமீறல்

### 8000 பேர் மீது சட்டநடவடிக்கை

(கொழும்பு)

கடந்த 24 மணித்தியாலங்களில்போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டில் எண்ணாயிரத்துக்கும் அதிக மானோருக்கு எதிராகசட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக்காலத்தில் வீதி விபத்துக் 15

## கடந்த கால அரசுகள் அல்ல நாங்கள்

# சட்டவிரோத மதத் தலங்களை அமைக்க நாம் விடமாட்டோம்

### அடித்துக் கூறுகிறார் புத்தசாசன அமைச்சர்



(கொழும்பு)

கடந்த கால ஆட்சிகள் போல இந்த ஆட்சியில் சட்டவிரோதமாக மதத் தலங்களை அமைப்பதற்கு அரசாங்கம் ஒருபோதும் அனுமதி வழங்காது என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹனிதும சுனில் செனெவி தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தென் கொரிய விமான விபத்து; 181 பேர் பலி



09

## மூன்று நாட்களுக்கு தொடர் மழை

(கொழும்பு)

இலங்கைக்கு தென் கிழக்காக நீடிக்கும் வலுக்குறைந்த காற்றுச்சுழற்சியின் காரணமாக வடக்கு-கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் 02

## மியன்மார் அகதிகளை

## மனிதவுரிமைகள் ஆணைக்குழு சந்திப்பதற்கும் முடியவில்லை

### ஜனாதிபதிக்கு ஆணைக்குழு கடிதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளை மனித உரிமைகள் ஆணைக்குழு கூட சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. 16

## போதைப்பொருட்களுடன் யாழில் பெண்ணொருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - ஏழாலை தெற்கு, மயிலங்காடுப் பகுதியில் போதைப்பொருட்களுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15

## 750 பயண வழித்தடத்தில் அசகாய சாரத்தியம்

### உரிமையாளரின் அனுமதிப் பத்திரம் இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை 750 வழித்தடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாரத்திய நடைமுறைகளை மீறிப் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்த 15

## யாழ்.கொழும்புத்துறையில்

## தேர்தல் வன்முறையில் ஈடுபட்ட நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாராளுமன்றத் தேர்தல் காலத்தில் வன்முறையில் ஈடுபட்ட நபரொருவர் நேற்றுப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கு இரு தினங்களுக்கு 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எம் மீது வைத்த நம்பிக்கையைக் காப்போம்

## பிரதி அமைச்சர் சுனில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் செயற்படுகின்றனர்.

கிடைக்கப் பெற்றுள்ள மக்களாணையை ஒருபோதும் நாம் பலவீனப்படுத்தப் போவதில்லை எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சட்டத்தரணி சுனில் வடகல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (29) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று மாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களுக்கான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச செலவுகளைக் குறைத்து ஒட்டுமொத்த மக்களுக்கும் ஜனாதிபதி சிறந்த எடுத்துக்காட்டாக செயற்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அரசியல் தரப்பினால் மாறுப்பட்ட கருத்தைக் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மாத்திரம் பிரத்தியேகமாகப் பாதுகாப்பளிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இவ்விடயத்தில் எவ்வித அரசியல் பழிவாங்கலும் கிடையாது. அரச செலவுகளைக் குறைப்பதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளோம். ஆகவே அதற்கமைவாகச் செயற்படுவோம் என்றார். (ந-7)

# மருந்துகளுக்கான விலை நிர்ணயத்தில் சட்டச் சிக்கல்

## சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற முடிவு

மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் சட்டச் சவால்களைத் தீர்ப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனைகளைப் பெறுவதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மருந்து இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடம் நிர்ணய விலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகள் போதாமையின் காரணமாகவே தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

எவ்வாறாயினும் புதிய சட்டமொன்றை இயற்றுவதா? அல்லது தற்போதுள்ள ஏற்பாடுகளைத் திருத்தியமைத்து முன்னெடுப்பதா? என்பது தொடர்பில் இன்னமும் உறுதியான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-7)


## வாடகைக்கு வழங்குதல்

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலைக்குச் சொந்தமான இரண்டு கடைகள் வாடகைக்கு வழங்கப்படவுள்ளன. வாடகைக்குப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று 2025.01.18 ஆந் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு : 077 238 0196

தலைவர்
தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை
தெல்லிப்பளை (துர்க்கை அம்மன் கோவில் முன்பாக)

(C-1912)


## மூன்று நாட்க...

பெரும்பாலான மாவட்டங்களில் அடுத்து வரும் மூன்று நாட்கள் சாதாரண மழையுடன் கூடிய சீரற்ற வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வட இந்திய நிலப்பரப்பில் இருந்து வருகின்ற பனிக் குளிர் காற்றின் தாக்கம் தமிழக நிலப்பரப்புடன் கணிசமானளவில் துண்டிக்கப்படுகிறது.

அதனால் காற்றுச் சுழற்சியின் மூலமாக வெப்ப நீராவியை சுமந்து வருகின்ற மழைக்காற்றின் (Easterlies) வீதம் இலங்கையின் வடகிழக்கு நிலப்பகுதியில் அதிகமாக காணப்படுகிறது.

இதன் விளைவாக வடக்கு கிழக்கில் அதிகமாக மேகங்கள் சூழ்ந்து காணப்படுவதுடன் அவ்வப்போது விட்டுவிட்டு தூறல் அல்லது சராசரி மழைவீழ்ச்சி வரை கிடைப்பதற்கு ஏதுவான சூழல் தென்படுகின்றது.

காற்றுச் சுழற்சியானது தொடர்ந்தும் இலங்கையின் தெற்கு கடற்பரப்பில் மேற்கு நோக்கி நகர்ந்து, வருகின்ற ஜனவரி முதலாம் திகதி புதன் கிழமை அளவில் அரபிக்கடலில் செயலிழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



3 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

ஸ்ரீமான் அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்
(சமூகப்பற்றாளர், இறைபணியாளர்)

தோற்றம் 1957.11.21 மறைவு 2021.12.30

அப்பாவே,
உங்கள் திருமுகம் காணாது
மூன்று ஆண்டுகள் கழிந்ததப்பா
உயிரினும் மேலான பாசமிகு அப்பா
உங்களை இழந்த ஒவ்வொரு
கணப்பொழுதும் இதய வலிகளை
சுமந்து கொண்டே காலங்கள் கழியுதப்பா
என்றும் நீங்கள் எம் உயிருள்ளவரை
உள்ளத்தில் அகல் விளக்காய் ஒளி வீசும் - தெய்வமே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திதி : மார்கழி அமாவாசை 30.12.2024
அவர்களின் நாளில் அவரது இல்லத்தில் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இல. 12, பொற்பதி றோட், கொக்குவில்.

என்றும் மறவாத குடும்பத்தினர்

(688)



பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்க மாட்டோம்!

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி



(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்கமாட்டோம் என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில், இன, மத வன்முறைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராகக் கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.


நாட்டில் இன, மத ரீதியிலான சில பிரச்சினைகள் இருக்கின்றமை உண்மைதான். அவற்றுக்கு நாம் தீர்வு காண்போம்.

ஆனால் அந்தப் பிரச்சினைகளை ஊதிப்பெருக்கும் வகையில், வன்முறைகளைத் தூண்டும் வகையில் எவராயினும் கருத்துக்களை வெளியிட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும்சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்க மாட்டோம். வேரூன்றியிருந்த தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறியதால் தான் வடக்கு - தெற்கு இடையேயான உறவு அறுந்தது.

பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள். அந்த நிலைமை மீண்டும் வர இடமளியோம். புதிய அரசமைப்பின் ஊடாகத் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## இந்தோனேசிய கப்பல் இலங்கை விஜயம்



(கொழும்பு)

இந்தோனேசிய கடற்படைக்கு சொந்தமான 'கிரி சுல்தான் இஸ்கந்தர் முடா-367' என்ற கப்பல் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

வருகை தந்த கப்பலை சிறிலங்கா கடற்படையினர் கடற்படை மரபுகளுக்கமைய வரவேற்றனர்.

'கிரி சுல்தான் இஸ்கந்தர் முடா-367' என்பது 90.71 மீற்றர் நீளமுள்ள 120 பணியாளர்களைக் கொண்ட கப்பல். இந்த கப்பலின் கட்டளை தளபதியாக அனுகேரா அன்னுருல்லாவால் செயற்படுகிறார்.

உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு, 'கிரி சுல்தான் இஸ்கந்தர் முடா-367' இன்று இலங்கையில் இருந்து புறப்பட உள்ளது. (நி-8)

## அரிசி மாபியாக்களை முறியடிக்க நடவடிக்கை

### விவசாய அமைச்சர் லால்காந்த

(கொழும்பு)

சந்தையில் உள்ள அரிசி மாபியாக்களை முறியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அரிசி இறக்குமதி செய்யப்பட்டாலும் சந்தையில் பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவுவதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டுள்ளதால் பச்சை அரிசியை இறக்குமதி செய்வதில் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். நெல் சந்தைப்படுத்தல் சபையில் நெல்லை கொள்வனவு செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆகையால் சந்தைக்கு தேவையான அரிசியை விநியோகிப்பதற்கு அரசாங்கம் தற்போது தயாராகி வருகின்றது.

இந்தநிலையில் சந்தையில் உள்ள அரிசி மாபியாக்களை முறியடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார். (நி-8)

## உப்பிற்கு தட்டுப்பாடு ஏற்படாது

### லங்கா உப்பு நிறுவனத் தலைவர்

(கொழும்பு)

உப்பினை பதுக்கி வைப்பதை தவிர்க்குமாறு அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் புதிய தலைவர் டி. நந்தன திலக மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்நாட்களில் நாட்டில் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மக்கள் அச்சமடைந்து மொத்தமாக உப்பை வீடுகளுக்கு கொண்டு சென்று சேமித்து வைத்துக் கொள்வதாகவும் தகவல் கிடைத்தது.

அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்தின் புதிய தலைவராக பதவியேற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு மாதத்திற்கு சராசரியாக ஒரு குடும்பத்திற்கு 400 கிராம் உப்பு தூள் மற்றும் 1 கிலோ கல் உப்பு 2 பக்கட்டுக்கள் போதுமானது.

எனினும் உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் தேவையற்ற அச்சம் காரணமாக உப்பினை பதுக்கி வைப்பதை தவிர்க்குமாறும் அவர் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அம்பாந்தோட்டை லங்கா உப்பு நிறுவனத்திடம் தற்போது 6,000 மெற்றிக் தொன் உப்பு இருப்பதாகவும் அது ஜனவரி மாதம் வரை போதுமானது என்றும் அவர் தெரிவித்தார்.

உப்புக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்ற சந்தேகம் காரணமாக வெளிநாடுகளில் இருந்து 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-8)

## முட்டை விலை மீண்டும் உயரலாம்

### எச்சரிக்கும் உற்பத்தியாளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் முட்டையின் விலை மீண்டும் உயரலாம் என முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன் 60 ரூபாய்க்கு மேல் விற்கப்பட்ட முட்டை விலை கணிசமாக குறைந்துள்ளது.

அதன்படி முன்னர் 40 ரூபாய் தொடக்கம் 45 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது 25 ரூபாய் தொடக்கம் 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் முட்டையின் விலை எதிர்வரும் நாட்களில் உயரலாம் என முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## தேங்காய் தட்டுப்பாடு மார்ச் வரை தொடரும்

### தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் தேங்காய் விலையில் மாற்றம் இல்லை என தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது..

மார்ச் மாதம் வரையில் தேங்காய் விளைச்சல் கிடைக்காது என்ற காரணத்தினால் தொடர்ந்தும் தேங்காய்க்கு தட்டுப்பாடு நிலவும் என தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாந்த ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

கைத்தொழில் துறைக்கும் நுகர்வோரிற்கும் தேங்காய் விநியோகம் செய்வதில் சிரமங்கள் நிலவி வருவதாகவும் இதனால் தொடர்ந்தும் தேங்காய் விலை உயர்வடைந்து செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேங்காய் விளைச்சல் கிடைக்கும் வரையில் இந்த நிலைமை நீடிக்கும் என தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் நிலைமைக்கு தீர்வு வழங்கும் நோக்கில் அரசாங்கத்திற்கு சொந்தமான தென்னந் தோப்புகளில் விளையும் தேங்காய்களை சதொச நிறுவனம் ஊடாக நுகர்வோருக்கு நேரடியாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது கோப்பாய் பிரதேச செயலக அணி





வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட ரீதியான கடினப்பந்து ரி-20 கிறிக்கெட் இறுதிப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவினால் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட ரீதியான கடினப்பந்து ரி-20 கிறிக்கெட் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதியது.

முதலாவதாக துடுப்பெடுத்தாடிய கோப்பாய் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பில் கே.கோமைந்தன் 45, ஏ.அன்புயன் 39, எஸ். நிரோஜன் ஆட்டம் இழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நல்லூர் பிரதேச செயலக அணி சார்பில் யு.கேதீஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச செயலக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அவ்வணி சார்பில் வி.தேனுஜன் 55, கே.ராகவன் 31 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கோப்பாய் பிரதேச செயலக அணி சார்பில் பி.கிரிஷோத் 4, விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக நல்லூர் பிரதேச செயலக அணி வீரர் வி.தேனுஜன், சிறந்த பந்து வீச்சாளராக கோப்பாய் பிரதேச செயலக அணி வீரர் பி.கிருஷோத், சிறந்த களத் தடுப்பாளராக கோப்பாய் பிரதேச செயலக அணி வீரர் வை.சங்கீதன், சிறந்த ஆட்ட நாயகனாக கோப்பாய் பிரதேச செயலக அணி வீரர் கே.கோமைதன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (நி-8,90)

## பும்ராவின் புதிய சாதனை




சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் குறைந்த பந்தில் 200 விக்கெட்டுக்களை வீழ்த்திய நான்காவது பந்துவீச்சாளர் என்ற சாதனையை ஜஸ்பிரிட் பும்ரா படைத்துள்ளார்.

குறித்த பட்டியலில் வக்கார் யூனிஸ் முதலாவது இடத்திலும், டேல் ஸ்டெய்ன் இரண்டாவது இடத்திலும் உள்ளதுடன் ககிசோ ரபாடா மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

வக்கார் யூனிஸ் 7,725 பந்துகளில் 200 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன், டேல் ஸ்டெய்ன் 7,848 பந்துகளிலும், ககிசோ ரபாடா 8,153 பந்துகளிலும் 200 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மழையால் ஆட்டம் பாதிப்பு

ஜிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் மோதும் முதல் டெஸ்டின் 4ம் நாள் ஆட்டம் மழையால் பாதியில் ரத்தானது. ஜிம்பாப்வே சென்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் புலவாயோவில் நடக்கிறது.

ஜிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் 586 ரன் எடுத்தது. மூன்றாம் நாள் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 425/2 ரண் எடுத்திருந்தது. ரஹ்மத் ஷா (231), கேப்டன் ஹஷ்மதுல்லா ஷாஹிதி (141) அவுட்டாகாமல் இருந்தனர்.

நான்காம் நாள் ஆட்டத்தில் மூன்றாவது விக்கெட்டுக்கு 364 ரண் சேர்த்த போது ரஹ்மத் ஷா (234) அவுட்டானார். பொறுப்பாக ஆடிய ஷாஹிதி 150 ரண்னை கடந்தார். ஆப்கானிஸ்தான் அணி 515/3 ரண் எடுத்திருந்த போது மழையால் போட்டி நிறுத்தப்பட்டது. மழை நீடித்ததால் போட்டி பாதியில் ரத்தானது. ஷாஹிதி (179), அப்சர் ஜஜாய் (46) அவுட்டாகாமல் இருந்தனர்.

ஒரு இன்னிங்ஸ் கூட முடியாததால், போட்டி "டிரா"வில் முடிய அதிக வாய்ப்பு உள்ளது. (நி-7)

## ■■■■■■ 4 ஆவது டெஸ்ட் ■■■■■■

# அவுஸ்திரேலியா முன்னிலையில்



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இரு அணிகள் இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி மெல்போர்னில் நடைபெற்று வருகிறது.

நான்காவது டெஸ்ட் போட்டியின் நான்காம் நாளில் இரண்டாவது இன்னிங்ஸில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா அணி நேற்றைய ஆட்ட நேர முடிவில் 9 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 228 ரண்களை எடுத்துள்ளது. இதன் மூலம் அந்த அணி 333 ரண்கள் முன்னிலை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியா சார்பில் மார்னஸ் லபுஷேன் 70 ரண்களையும், பேட் கம்மின்ஸ் 41 ரண்களை எடுத்து ஆட்டமிழந்தனர். கடைசி விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த நேதன் லயன் 41 ரண்களை அடித்துள்ளார். இவருடன் ஆடிய ஸ்காட் போலண்ட் 10 ரண்களுடன் களத்தில் இருந்தனர்.

ஆட்டநேர முடிவில் இந்தியா சார்பில் ஜஸ்பிரித் பும்ரா நான்கு விக்கெட்டுக்களையும், முகமது சிராஜ் மூன்று விக்கெட்டுக்களையும், ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிவாலயங்களின் வழித்தடம்' சிறப்பு நூல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

வடக்கிலுள்ள தொன்மையான பிரசித்தி பெற்ற சிவாலயங்களின் விபரங்களை தொகுத்து வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தால் "சிவாலயங்களின் வழித்தடம்" என்ற சிறப்பு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண பிரதம செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் நூலின் முதல் பிரதியை வடக்கு மாகாண சுற்றுலா பணியக தலைவர் பத்திநாதன் வெளியிட்டு வைத்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதர் சாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், மன்னார் மாவட்ட செயலாளர் கனகேஸ்வரன், துறைசார் அதிகாரிகள், ஆலய அறங்காவலர்கள், விடுதி உரிமையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது வடக்கு மாகாண சுற்றுலாத்துறையின் சிறப்பம்சங்களை வெளிப்படுத்தும் காணொளித் தொகுப்பும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (நி-8-33)

## போதைப் பொருளுடன் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

கொக்கெய்னுடன் இலங்கைக்கு வந்த பெண் ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைது செய்துள்ளது.

குறித்த பெண் கானாவில் இருந்து வந்தவர் எனவும், அவர் தென்னாபிரிக்க கடவுச்சீட்டுடன் நேற்று அதிகாலை 1.50 மணியளவில் கட்டார் எயார்வைஸ் விமானத்தில் நாட்டிற்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

41 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான பெண்ணிடமிருந்து சுமார் 4,068 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். (நி-8)

# தொலைபேசியை திருடிய நபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்குப் பகுதியில் வீடொன்றில் தொலைபேசியை திருடிய நபர் ஒருவர் காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், துன்னாலைப் பகுதியில் வீடொன்றில் ஆட்கள் இல்லாத சமயம் பார்த்து குறித்த வீட்டிற்குள் சென்ற நபர் அங்கு இருந்த பெறுமதிமிக்க தொலைபேசியை களவாடிச் சென்றுள்ளார்.

வீட்டு உரிமையாளர் தொலைபேசியை காணாததை அடுத்து சி.சி.ரி.வி கமராவை பார்த்த போது மேற்குறித்த நபர் தொலைபேசியை திருடியது தெரியவர, நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியதைத் தொடர்ந்து, விசாரணைகளை மேற்கொண்ட குற்றத் தடுப்பு பிரிவினர் குறித்த நபரை வல்லைப் பகுதியில் வைத்துக் கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதில் அவர் திருடிய தொலைபேசியை யாழ். நகரில் உள்ள கடையொன்றில் விற்பனை செய்தமை கண்டறியப்பட்டது.

இவ் விடயம் தொடர்பில் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை நடத்தியதுடன் சந்தேக நபரை நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். அதனைத் தொடர்ந்து குறித்த நபர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (க-8-60)

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

கடந்த (11.12.2024) புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எமது தாயார்

அமரர். **மகாலட்சுமி கணபதிப்பிள்ளை**



தோற்றம்-24.04.1940 மறைவு-11.12.2024

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 31.12.2024 நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் வண்ணை காமாட்சி அம்பாள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (682)

**13, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர்.


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**00919566156719**

Western Union WU MoneyGram. Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

**077 839 3974**


# நினைவேந்தல்

(யாழ்ப்பாணம்)

மாமனிதர் குமார்பொன்னம்பலம் அவர்களின் 25 ஆவது ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது என நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (நி-8)

# இராசிபலன்

30.12.2024
மார்கழி 15, திங்கட்கிழமை
அமாவாசை பின்னிரவு 4.56 மணிவரை
மூலம் பிற்பகல் 1.06 மணிவரை

சுபநேரம் -12.29-1.59 மணிவரை
இராகுகாலம்-7.59-9.29 மணிவரை
ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி
அமாவாசை விரதம்

சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

**வளவன்**




வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.




குடும்பத்தில் சிறு கருத்து முரண் பாடுகள் தோன்றி மறையும், வெளியூர் பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், தேவையற்ற விரயங்கள் அதிகரிக்கும் நாள்.




நண்பர்களால் ஒரு சில நன்மைகள் நடைபெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.




பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், காலை நேரத்தில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




தொழில் வளர்ச்சி கூடும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாக்கு மேன்மையுண்டு.




சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, வழக்கமான பணிகளில் ஆனந்தம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது.






குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




மற்றவர்களின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**உன்னைத் தவிர வேறு யாரும் உனக்கு அமைதி தர முடியாது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்.இணுவில்,மருதனார்மடம் ஸ்ரீ சுந்தர ஆஞ்ச நேயர் ஆலய தேர்த்திருவிழா நேற்றைய தினம் பக்திபூர்வமாக இடம்பெற்றது.(படங்கள்-சிவசாந்தன்)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தில் இன்று காலை 7 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறும். (க-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

**Botanical name- Cordia dichotoma**
**Family- Boraginaceae**

## நறுவிலிப்பழம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நறுவிலிப்பழத்தினை நறுவல்லிப்பழம், நரிவிழிப் பழம்,மூக்கு சளிப்பழம் எனவும் அழைப்பர். இப் பழத்தில் புரதச்சத்து, பொஸ்பரஸ், உயிர்ச்சத்து C, இரும்புச்சத்து, பொட்டாசியம், மகனீசியம், கல்சியம் போன்ற உயிர்ச்சத்துக்களும், போசனைக் கூறுகளும் காணப்படுகின்றது.

ஆடி, ஆவணி மாதங்களில் நறுவிலி மரத்தில் பழங்கள் கொத்துக் கொத்தாக காய்த்துப் பழுக்கும். சாப்பிடக் கூடிய இனிப்புச் சுவையும், சளித்தன்மையுமுடைய பழங்களாகும். பொதுவாக வெப்பவலய நாடுகளில் இதன் பரம்பல் அதிகமாக இருக்கும். நன்றாக வளர்ந்த மரங்களில் ஒரே நேரத்தில் ஒரு இலட்சம் பழங்களைக் காணலாம்.

மண்ணிறத்தில் பழங்கள் காணப்படும். பழங்களை 20 இற்கு மேல் சாப்பிடமுடியாது. இப் பழங்கள் கிடைக்கும் பருவ காலங்களில் சாப்பிட்டு வர நமது உடற் சூட்டை தணிக்கும் ஆற்றல் உடையது. அத்துடன் குடற்புண்களை ஆற்றும் தன்மையுமுண்டு. குடற் புழுக்களை வெளியேற்றக் கூடியது. மலத்தையும் இளக்கி வெளியேற்றும் ஆற்றலுமுண்டு.

இப் பழத்தில் இருக்கும் ஊட்டச் சத்துக்களால் எடை குறைந்தவர்கள் அவர்களின் உயரத்திற்கு ஏற்ப உடல் எடையை இயற்கை முறைப்படி அதிகரிக்கச் செய்யலாம். நறுவிலிப் பழங்கள் அதிகரித்த பித்தத்தையும் அழலையும் தணிக்கக் கூடியது.

அதியுயர் குருதி அமுக்கம் உடையவர்களும் இப் பழங்களைச் சாப்பிடலாம். தோல் வறட்சி உடையவர்கள் அடிக்கடி இப் பழங்



களைச் சாப்பிடுவதனால் தோல் வறட்சி நீங்கி தோல் மினுமினுப்பாக வரும். இப் பழங்களை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு இப் பழங்களிலுள்ள நார்ச்சத்தானது குடல் இயக்கத்தை சீராக்கி செரிமானம் போன்ற செயற்பாடுகளுக்கு உதவி செய்யக் கூடியதாக இருக்கும்.

**100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்**

ஈரலிப்பு 6 கிராம், புரதம் 35 கிராம், கல்சியம் 55 மில்லி கிராம், பொஸ்பரஸ் 275 மில்லி கிராம், நாகச்சத்து 2 மி.கிராம், இரும்புச்சத்து 6 மி.கிராம், மகனீசியம் 2 மி.கிராம், செம்புச் சத்து 1.6 மி.கிராம், குரோமியம் 0.2 மி.கிராம் ஒட்சாலிக்கமிலம் 250 மி.கிராம் உயிர்ச்சத்து C-25. மி.கிராம்.

இப் பழங்களை தொடர்சசியாக சாப்பிட்டு வரும் போது மூட்டுக்களுக்கு பலத்தைக் கொடுக்கும். என்புகளை பலப்படுத்தும். அத்துடன் மூட்டுக்களுக்கு இடையே உராய்வு ஏற்படுவதையும் தடுக்கக் கூடியதாக இருக்கும்.


குருதிச் சோகை இருப்பவர்கள் இப் பழங்களைச் சாப்பிட்டு வரும் போது இரத்தத்தை விருத்தி செய்யும். அத்துடன் இரத்தத்தில் ஈமோகுளோபினின் அளவை கூட்டக் கூடியதாக இருக்கும்.

இப் பழங்களில் பீற்றா சைற்றோஸ்ரிரோல், பாமிற்றிக்கமிலம், ஸ்ரெயரிக்கமிலம், ஒலிக்கமிலம் போன்ற முக்கிய வேதியற் பொருட்களும் காணப்படுகின்றது. இவ் நறுவிலிப் பழங்களை சாப்பிடுவதால் குடிவகைகளை பயன்படுத்துபவர்களுக்கு ஏற்படும் ஈரல் பாதிப்பை தடுக்கக் கூடியது.

அத்துடன் கல்லீரலில் தேங்கும் போதைப் பொருட்களின் நச்சுத்தன்மையையும் நீக்கக் கூடியது.இப் பழங்களில் காணப்படும் நுண் ஊட்டச்சத்துக்களான முக்கிய உயிர்ச்சத்துக்கள், கனிமங்கள் நோய் எதிர்ப்பாற்றலை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் நாட்பட்ட மலச்சிக்கல், மூல வியாதிகளை குணப்படுத்த இதன் பழங்களை அடிக்கடி சாப்பிட்டு வரவேண்டும்.

பாரம்பரிய மூலிகைகளான துரியம் பழம், மற்றும் நறுவிலிப்பழம் போன்றவற்றை சாப்பிட்டு வரும் போது குழந்தைபேற்றை ஏற்படுத்தச் செய்யும் முக்கிய வேதியற் சத்துகள் இப் பழங்களில் காணப்படுகின்றது. ஆடி, ஆவணி மாதங்களில் இப் பழங்கள் நிறைய கிடைக்கும் போது கோதுடன் பழங்களை உலர்த்தி பொடித்து தினமும் 2 கிராம் அளவு தூய தேனுடன் சாப்பிட்டு வர நாட்பட்ட இருமல், ஆஸ்மா போன்ற நிலைமைகள் குணமாவதுடன், ஈரலை பலப்படுத்தி, fatty Liver இனையும் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

மேலும் இம் மரத்தின் கட்டையில் இருந்து தான் ஈர்கோலி தயாரிக்கப்படுகின்றது. இப்பழங்களை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை. எமது பிரதேசங்களில் நறுவிலி மரங்கள் நிறைய பரம்பல் உண்டு.இனி இப் பழங்களைக் கண்டால் கண்டிப்பாக நீங்கள் பயன்படுத்த வேண்டும் இயற்கை எமக்குக் கொடுத்த இவ் அரிய பழங்களை தவிர்த்து, அதிக விலை கொடுத்து பழங்கள் வாங்கிச் சாப்பிடுவதால் என்ன பயன். இப் பழங்களை சாப்பிட்டுவரும் போது சிறுநீர் நன்கு வெளியேறும். இப் பழங்களிற்கு சர்க்கரையை உயர்த்தும் திறன் குறைவாக இருப்பதாலும், நார்ச்சத்து அதிகமாக இருப்பதாலும் நீரிழிவு நோயாளிகள் இப் பழங்களில் 4, 5 தினமும் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்தரிக்கப்படவுள்ள

# பலாலி, கட்டுநாயக்க விமான நிலையங்கள்

(கொழும்பு)

இலங்கையின் யாழ்ப்பாணம் மற்றும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையங்கள் விஸ்தரிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கான முன்மொழிவுகளை அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கோரியுள்ளது.

இலங்கையின் அரசால் நடத்தப்படும் விமான நிலைய முகாமைத்துவ நிறுவனம், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளைக் கோரியுள்ளது.

மேலும் இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமானது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்காக ஜப்பானிய நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி வரையில் விலை மனுக்களை சமர்ப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.


கட்டுநாயக்க விமான நிலையக் கட்டடத்தை கட்டி முடிக்கும் இந்த திட்டமானது, ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமை நிதியத்தின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட உள்ளது.

பிரதான முனைய கட்டடம், உயரமான சாலை போன்ற உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன.

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத் திட்டத்திற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் காலக்கெடு ஜனவரி 29 ஆம் திகதியன்று முடிவடைகிறது. (நி-8)

# கிராம்பு, சாதிக்காய் அறுவடையில் வீழ்ச்சி

## விவசாயிகள் கவலை



(மாத்தளை)

மழை காரணமாக உள்ளூர் ஏற்றுமதி உற்பத்திகளான கிராம்பு, சாதிக்காய் போன்றவற்றின் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மாத்தளை, ஹாரிஸ்பத்துவ, வத்தேகம, உக்குவலை, அளவத்துகொடை, முருதலாவை, கடுகண்ணாவை, கம்பளை, இரத்தோட்டை போன்ற பிரதேசங்களில் அதிகளவில் கிராம்பு மற்றும் சாதிக்காய் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அப்பிரதேசங்களில் தொடர்ந்து பல நாட்கள் பெய்த மழை காரணமாக பயிர்களில் ஒருவகை வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (நி-8)

# இந்த வருடத்தில் மட்டும் 350 யானைகள் பலி

(கொழும்பு)

கடந்த ஆண்டுகளை விட 2024 ஆம் ஆண்டில் காட்டு யானைகள் பலி எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக வன் ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் சுமார் 350 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களினால் அதிகளவான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் மின்சாரம் தாக்கி 50 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரயில் மோதி 10 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-8)

# திருகோணமலையில் பாரிய விபத்து

## 10 பேர் படுகாயம்



(திருமலை)

திருகோணமலையில் மட்டக்களப்பு பிரதான வீதியில் வானும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் 10 பேர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள வெருகல் பாலத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மூதூர் தள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்தில் திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்கு வானில் பயணித்த ஐவரும் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலை நோக்கி காரில் பயணித்த ஐவருமாக 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# தேசிய மின் கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் மின்சாரம்

(கொழும்பு)

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களின் மூலம் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் தேசிய மின் கட்டமைப்பிற்கு 500 மெகாவாட் மின் அலகை இணைக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி, தற்போது புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி சுமார் 1,400 மெகாவாட்டாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி அதிகார சபையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் இது தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினை குறித்து அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்தியத்தில் அதிக அளவான எரிசக்தியினை செலவிடும் நாடாக இருந்த போதிலும் இந்த நிலைமையினை மாற்றி நியாயமான மற்றும் மலிவான விலையில் எரிசக்தியினை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி உற்பத்தியில் முதலீடு செய்ய முன்வரும் தனியார் துறைக்கு அரசாங்கம் போதுமான வசதி வாய்ப்புக்களை வழங்குவதாகவும் தெரிவித்த வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடி இது அரசாங்கத்திற்கும் முதலீட்டாளர்களுக்கும் முன்னேற்றகரமான சூழ்நிலையை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டார். (நி-8)


கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம் : 6'<br>தகைமை/தொழில்: Hotel Management, House Keeping Supervision.<br>எதிர்பார்ப்பு : உத்தியோகம்.<br>தொ.இ: B/15039 | பிறப்பு -1998 - இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: O/L, Team Leader (PVT)<br>எதிர்பார்ப்பு: தகுதியான மணமகள்<br>தொ.இ: G/15052 |
| பிறப்பு: 1985 - இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5' 10"<br>தகைமை/தொழில்: A/L, Electrician.<br>எதிர்பார்ப்பு: தகுதியான மணமகன்<br>தொ.இ: B/15040 | பிறப்பு -1996 - இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா- 11 1/2<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில் - BSc, UK.<br>எதிர்பார்ப்பு : தகுதியான Degree.<br>தொ.இ: G/15057 |
| பிறப்பு:1985 - இந்து<br>நட்சத்திரம் : ரோகினி 12 இல் சூரி, செவ்.<br>கி.பா- 17 1/2<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: Advanced Diploma in Computer Science Accountant.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்.<br>தொ.இ: B/15041 | பிறப்பு - 1995 - இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா- 13 1/2<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: BSc, Canada.<br>எதிர்பார்ப்பு: Degree<br>தொ.இ: G/15060 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடையும் அபாயம்



வெப்பநிலை உயர்வு காரணமாக பனிப்பாறை உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடல் நீர் ஊருக்குள் புகும் அபாயம் அதிகரிக்கும்.

உலகம் முழுவதும் ஒவ்வொரு பகுதியும் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டு வருகிறது. வெப்பம் அதிகரிப்பு காரணமாக பனிப்பாறைகள் உருகி வருகின்றன.

இதனால் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். இந்த நிலையில் உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடையும் நிலையில் உள்ளது.

கடந்த 1986 ஆம் ஆண்டு அண்டார்டிகாவில் உள்ள பில்ச்னர் பனிக்கட்டியில் இருந்து பனிப்பாறை உடைந்து பிரிந்தது. உலகின் மிகப்பெரிய பனிப்பாறையான அதற்கு ஏ23ஏ என்று பெயரிடப்பட்டது. சில வாரங்கள் கடலில் இந்த பாறை நகர்ந்தது. அதன்பின் வெட்டெல் கடலில் தெற்கு ஓர்க்னி தீவுகளுக்கு அருகில் உறைந்தது.

இந்த நிலையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக எங்கும் நகராமல் உறைந்து இருந்த உலகின் மிகப்பெரிய பனிப்பாறை உடைய தொடங்கி உள்ளது. தற்போது மீண்டும் உடைந்து அந்த பாறை நகர தொடங்கி உள்ளது. இந்த பனிப்பாறை அடுத்த ஒரு மாதத்திற்குள் உடைந்து விடும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


வெப்பநிலை உயர்வு காரணமாக பனிப்பாறை உடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏ23ஏ பனிப்பாறை இனி இவ்வளவு பெரிதாக நீடிக்க முடியாது. அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக மேலும் உடையும். இதன் காரணமாக கடலில் நீர் மட்டம் உயரும். இதனால் கடல் நீர் ஊருக்குள் புகும் அபாயம் அதிகரிக்கும். (நி-8)

# 181 பயணிகளுடன் தீப்பற்றி

- அனைத்துப் பயணிகளும் உயிரிழப்பு
- மீட்புப் பணிகள் தீவிரம்
- தென்கொரியாவில் சோகம்

(சியோல்)

**தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து 175 பயணிகள், 6 விமான ஊழியர்கள் என மொத்தம் 181 பேருடன் நேற்று முன்தினம் தென்கொரியாவின் முவான் நகருக்கு சென்ற விமானம் முவான் விமான நிலையத்தில் தரையிறங்க முயற்சித்தபோது விபத்துக்குள்ளானது.**




இந்நிலையில் இந்த விமான விபத்தில் அதில் பயணம் செய்த 181 பேரும் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

முன்னதாக சம்பவம் அறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் விபத்தில் படுகாயமடைந்தவர்களை

## காசா மருத்துவமனையை எரித்தது இஸ்ரேல்!

### வெளியேறிய நோயாளிகள்



(ஜெருசலேம்)

காசாவின் வடக்குப் பகுதியில் செயற்படும் மருத்துவமனையை இஸ்ரேல் படைகள் தீயிட்டு எரித்தன. காசாவில் பல்வேறு பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நடந்து வருகிறது.

வடக்கு காசாவில் உள்ள கமால் அத்வான் மருத்துவமனை மீது இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தியதோடு நூற்றுக்கணக்கான நோயாளிகள் மற்றும் பொதுமக்களை மருத்துவமனையில் இருந்து வெளியேற்றி உள்ளது.

மருத்துவமனையில் இருந்து நோயாளிகள் வெளியேற்றப்பட்ட இந்த சம்பவத்தை ஹமாஸ் நடத்தும் பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தி உள்ளது.

சுகாதார அமைச்சக இயக்குனர் முனீர் அல் பர்ஷ், "இஸ்ரேல் படைகள் மருத்துவமனைக்குள் நுழைந்து அதை தீயிட்டு எரித்து வருகிறது" என குற்றம் சாட்டி உள்ளார். காசாவில் மற்ற இடங்களில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டுகளை இஸ்ரேலிய இராணுவம் மறுத்துள்ளது. அந்த மருத்துவமனை ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் தளமாக செயற்பட்டு வருகிறது என்றும் குற்றச்சாட்டி உள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் சென்ற விமானம்

# எரிந்தது!

ப்பு

75
31
ன்
ன
து



இந்த
அதில்
1 பேரும்
தகவல்
ச்சியை

ம்பவம்
து வந்த
விபத்தில்
வர்களை

மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இருந்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழப்புகள் அதிகரித்துள்ளது. இந்த விபத்து குறித்து அதிகாரிகள் உயர்மட்ட விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விமான பயணிகளில் அதிகமானோர் தென் கொரியர்கள் எனவும், 2 பேர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் ஊடகங்களில் செய்திகள் வெளியாகி உள்ளன. விபத்துக்கான காரணம் இன்னும் தெளிவாக தெரியவில்லை.

ஆனால், ஒரு பறவை மோதியதால் விமானத்தில் லேண்டிங் கியர் செயலிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள காணொளியில், விமானம் சறுக்கிக் கொண்டே ஓடுபாதையில் இருந்து விலகிச் சென்று சுவரில் மோதி பின் தீப்பிடித்தது.

முவான் நகர் தென் கொரிய தலைநகர் சியோலில் இருந்து 288 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது. விமான பாதுகாப்புக்கு அதிக முக்கியத்துவம் தரும் துறையாகத் தென் கொரியாவின் விமானப் போக்குவரத்துத் துறை கருதப்படுகிறது. ஜேஜ் விமான நிறுவன வரலாற்றில் இதுவே முதல் உயிரிழப்புகளைக் கொண்ட மோசமான விபத்தாகும். தென் கொரியாவின் மிகப்பெரிய குறைந்த கட்டண விமான நிறுவனமான இது 2005 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. (நி-8)

## காசாவில் கடும் குளிர் ஆரம்பம் இதுவரை மூன்று குழந்தைகள் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

காசாவில் கடும் குளிர்காலம் ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து இதுவரை மூன்று குழந்தைகள் குளிரில் விறைத்து உயிரிழந்துள்ளன.

காசாவின் தென்பகுதியில் உள்ள அல்-மவசியில் புதிதாக பிறந்த குழந்தையொன்று கடும் குளிர் காரணமாக உயிரிழந்துள்ளது.

இது இஸ்ரேலின் தொடர் தாக்குதல்களிற்கு மத்தியில் தங்கள் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்துள்ள காசா சிறுவர்களின் உயிர் வாழ்தல் கடும் அச்சுறுத்தலிற்குள்ளாகியுள்ளதை வெளிப்படுத்தியுள்ளது.

கடும் குளிரிலிருந்து பாதுகாப்பு அளிக்க கூடியதங்குமிடம் இன்மையே இதற்கு காரணம் என கான் யூனிசில் உள்ள நாசெர் மருத்துவமனையின் மருத்துவர் அஹமட் அல் பரா தெரிவித்துள்ளார். (நி-8)

## அஜர்பைஜான் விமான விபத்திற்கு மன்னிப்பு கோரினார் புடின்




(மொஸ்கோ)

கிறிஸ்மஸ் தினத்தன்று அஜர்பைஜானின் பயணிகள் விமானம் விழுந்து நொருங்கிய சம்பவத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மன்னிப்பு கோரியுள்ளார்.

எனினும் அவர் இதற்கு ரஷ்யாவின் தவறே இந்த விமான விபத்திற்கு காரணம் என நேரடியாக குறிப்பிட தவறியுள்ளார்.

உக்ரைனின் ஆளில்லா விமானங்களிற்கு எதிராக ரஷ்யாவின் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தவேளை துன்பியல் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அஜர்பைஜான் ஜனாதிபதி இல்ஹாம்அலியெவினை தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட வேளை புடின் இதனை தெரிவித்துள்ளார். ரஷ்யாவின் வான் வெளியில் இடம்பெற்ற இந்த சம்பவத்திற்கு மன்னிப்பு கோரிய புடின் உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களிற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார். (நி-8)



## காலநிலை மாற்றத்தால் நடப்பாண்டில் 3700 பேர் பலி



(லண்டன்)

ஒவ்வொரு ஆண்டும் காலநிலை மாற்றத்தால் உலக நாடுகள் கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

அந்த வகையில் காலநிலை மாற்றம் காரணமாக இந்த ஆண்டு மட்டும் (2024) உலகம் முழுவதும் 3,700 பேர் இறந்துள்ளதாக லண்டனைச் சேர்ந்த உலக வானிலை கண்காணிப்பகம் தகவல் தெரிவித்துள்ளது.


மேலும், காலநிலை மாற்றத்தால் ஆண்டின் சராசரி வெப்ப நாட்களில் 41 நாட்கள் கூடுதலாகி உள்ளது.

மேலும் கடும் வெயில், வறட்சி, காட்டுத்தீ, வெள்ளம் மற்றும் புயல் காரணமாக உலகநாட்டு மக்கள் கடும் அவதியடைந்து உள்ளனர். சூடான், நைஜீரியா, கேமரூன் ஆகிய நாடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 2 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா செல்லும் இலங்கையர்களுக்கு இலவச விசா

## வழங்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை




(கொழும்பு)

இந்தியா செல்லும் இலங்கை பிரஜைகளுக்கு இலவச விசாவை வழங்குமாறு இந்திய அரசாங்கத்திடம் வெளிவிவகார அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை - இந்தியாவுக்கிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக தொடர்புகளை மேலும் விரிவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இது ஏதுவாக அமையும் என்று வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, ஜேர்மன், அவுஸ்திரேலியா, சவுதி அரேபியா, சீனா, இந்தியா, ரஷ்யா, தென் கொரியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட 35 நாடுகளுக்கு இலவச விசா வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு இத்திட்டம் நடைமுறையிலுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இலங்கை பிரஜைகளுக்கும் இலவச விசா வழங்குவது குறித்து அவதானம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இலங்கையின் இந்தக் கோரிக்கை தொடர்பில் இந்தியா ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 500 | 500-600 | 400 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 240 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 1200 | 1300 | 1200 | 1300-1500 | 1000 |
| தக்காளி | 400 | 400 | 400 | 350-400 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 240 | 150-200 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 260 | 300 |
| கரட் | 250 | 350 | 400 | 250 | 400 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 180 | 300 | 250 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 150 | 100-130 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 300 | 400 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 200 | 380 | 200 |
| பாகற்காய் | 800 | 1100 | 600 | 800-1000 | 1000 |
| வெண்டக்காய் | 200 | 250 | 150 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 140 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 450 | 400 | 350-500 | 300 |
| லீக்ஸ் | 400 | 380 | 400 | 300 | 400 |
| பீற்றூட் | 450 | 400 | 250 | 320 | 500 |
| கறிமிளகாய் | 850 | 750 | 600 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | 1000 | -- | -- |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400-500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 400 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 350-500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 90-170 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 1000 | 800 | 800 |
| வெங்காயப்பூ | 500 | 800 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 240 | 120 | 200 | 150-200 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 150 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 150 | 80 | 240 |

# இன்று ஒரு தகவல் 292



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## தமிழ்த் தாத்தா

1887 ஆம் வருடம் ஆவணி மாதம் ஒரு முக்கியமான நாள். ஆவணி அவிட்டம். கல்லூரியில் ஒரு வாரம் விடுமுறை.

அந்த விடுமுறையை பயனுள்ள வகையிலே செலவு செய்ய வேண்டும் என்று நினைத்தார் ஒருவர். பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடலாம் என்று நினைத்தார். பரம்பரை வித்துவான் வீடுகளிலே பத்துப்பாட்டு ஏடுகளைத் தேடலாம் என்று முடிவு செய்தார்.

அவருடைய அப்பாவோ இங்கே இருக்காமல் இந்த நேரத்தில் வெளியூர் போக வேண்டுமா என்று கேட்டார். ஆனால் இவரோ அதை விட பத்துப் பாட்டுத்தான் முக்கியம் என்று நினைத்தார். அப்பாவிடம் ஏதோ சமாதானம் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

ஒரு ஒற்றை மாட்டு வண்டியிலே ஏறி ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனார். பாதி வழியில் வண்டி குடை சாய்ந்தது. இவர் கீழே விழுந்தார். இவர் மேல் தகரப்பெட்டி விழுகிறது. இதற்காக அவர் பயணத்தை நிறுத்தவில்லை.

ரயிலில் ஏறினார். ரயில் புறப்பட்டது. பாதி வழியில் திடீரென்று ரயிலும் நின்றது. இவர் என்ன விடயம் என்று எட்டிப் பார்த்தார். ஒரு அதிகாரி வேகமாக வந்து கீழே இறங்கி வேறு பெட்டியில் ஏறுங்கள் என்றார். முன்னால் உள்ள பெட்டியில் தீப்பிடித்துவிட்டது அதனால் தான் அப்படிச் சொன்னார்.

இவர் கீழே இறங்கி வேறு பெட்டியில் அமர்ந்து கொண்டார். ஒரு வழியாக ரயில் போக வேண்டிய இடத்திற்குப் போய் சேர்ந்தது.

இப்படி விடாப்பிடியாக நின்று தமிழ் இலக்கியங்களை நமக்குத் தேடிக் கொடுத்தவர் யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யார் எங்கள் தமிழ்த் தாத்தா தான். உவே சாமிநாத ஐயர்.

நாங்களாக இருந்தால் ஒற்றை மாட்டு வண்டி குடை சாய்ந்த போதே நேரம் சரியில்லை என்று சொல்லி வீட்டுக்குத் திரும்பியிருப்போம்.

கல்லூரியில் ஒரு நாள் வருடம் 1900 மே மாதம் இரண்டாம் திகதி இளங்கலை மாணவர்களுக்கு இவர் தமிழ்ப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். அப்போது ஒரு மாணவன் எழுந்து இவரிடம் சொல்கிறார், ஐயா எங்கள் விடுதிக்கு ஒருவர் வந்திருக்கிறார் முன்பு வசதியாக வாழ்ந்தவர். இப்போது வறுமையில் இருக்கிறார்.

கடன் சுமை அதிகம். கடன்காரர்களுக்குப் பயந்துகொண்டு இப்போது தலைமறைவாக இருக்கிறார். அவர் ஒரு பெரிய துணி மூட்டை வைத்திருக்கிறார். அதில் பழைய தமிழ்ச் சுவடிகள் நிறைய இருக்கிறது. நூறு சுவடிகளுக்கு மேல் இருக்கும். அவற்றை முழுவதும் அன்பளிப்பாகத் தருவதற்காக வந்திருக்கிறார்.

அவர் தனக்கு பணம் எதுவும் வேண்டாம். இவற்றைப் பாதுகாத்தால் போதும் என்கிறார் என்று அந்த மாணவன் கூறினான். தமிழ்த் தாத்தாவுக்குத் தாங்க முடியாத மகிழ்ச்சி. உடனே நேரில் சென்று அதை வாங்க வேண்டும் என்று நினைத்தார்.

ஆனால் அந்த மாணவன் தானே சென்று அந்த சுவடிக் கட்டுக்களை எடுத்துக் கொண்டு வந்து தன் ஆசிரியரிடம் கொடுத்தார். சுவடி தந்த அந்தப் பெரியவரைப் பார்க்காமலே இருந்தால் அது பெரிய பாவம் என்று சொல்லி உடனே விடுதிக்குப் போனார் உவே சாமிநாத ஐயர்.

ஆனால் அதற்குள்ளே தன்னுடைய பெயரையோ ஊரையோ யாரிடமும் சொல்லாமலே போய்விட்டார். அவரைப் பார்க்க முடியவில்லை என்று தமிழ்த் தாத்தாவுக்கு ரொம்ப வருத்தம். அது யார் என்பது இதுவரைக்கும் யாருக்குமே தெரியாமல் போய் விட்டது.

ஆனால் அந்த சுவடியை வாங்கிக் கொண்டு வந்து கொடுத்த மாணவன் பெயர் சாம்பசிவ செட்டியார் என்று உவேசாமிநாத ஐயர் சொல்லியிருந்தார். தமிழ்விடுதூது அந்த சுவடிக் கட்டிலேதான் இருந்தது.

இந்தக் காலத்து எழுத்தாளர் ஒருவர் தன் மனைவியை அழைத்து உட்கார வைத்து இவ்வளவு விபரத்தையும் சொன்னார். அந்த அம்மாவும் பொறுமையாய் கடைசி வரையும் கேட்டுக்கொண்டிருந்தார்.

அபூர்வமான சுவடிகளை அழியாமல் காப்பாற்றி இலக்கியத்திற்கு பெரும் சேவை செய்தவர் அந்தப் பெரியவர். அது போல் நாமும் எம்மால் முடிந்த சேவையை செய்ய வேண்டும் என்றார் அந்த எழுத்தாளர் தன் மனைவியிடம்.

அதற்கு அந்த அம்மா சில சுவடிகளை அழியாமல் காப்பாற்றினால் அது சேவை. சில சுவடிகளை அழித்துவிட்டால் அதுதான் சேவை. அப்படிப்பட்ட பெரிய சேவையை இலக்கிய உலகத்துக்கு நான் இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறேன் என்றார். அப்படி என்ன செய்கிறாய் என்று ஆச்சரியமாகக் கேட்டார் எழுத்தாளர்.

நீங்கள் தினமும் எழுதி மலையாக குவித்து வைக்கிறதையெல்லாம் நான் அப்ப அப்ப எடுத்து அடுப்பு எரிக்க உபயோகப்படுத்துகிறேனே. இலக்கிய உலகத்துக்கு இதைவிட பெரிய சேவை நான் என்னத்தை செய்துவிட முடியும் என்றார் அந்த அம்மா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் அரியாலை மகாமாரியம்மன் மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.
(படங்கள்:-சிவசாந்தன்)

# வடக்கில் பயிரிடப்படும் நெல்லை வடக்கிற்கே பயன்படுத்த வேண்டும்

## இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கோரிக்கை

(சாவகச்சேரி)

வடக்கு மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல்லானது வடமாகாணத்தின் நுகர்வுக்கு முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என இயற்கையின் நண்பர்கள் இயக்கம் வடக்கு மாகாண ஆளுநரிடம் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக இயற்கையின் நண்பர்கள் இயக்கம் கருத் துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் விளையும் நெல்லில் கணிசமான அளவைத் தனியார் துறை குறிப்பாக தென்பகுதி மற்றும் உள்ளூர் வர்த்தகர்களே கொள்வனவு செய்து வருகின்றனர்.

வயலில் அறுவடை செய்யும் போதே கொள்வனவு செய்வதால் நெல்லில் இருக்கும் ஈரலிப்பைக் காரணம் காட்டி நெல்லுக்கு உரிய விலையைக் கொடுப்பதற்கும் கொள்வனவாளர்கள் முன்வருவதில்லை.

வடக்கு மாகாணத்தில் மக்களின் நுகர்வுத் தேவையை விட ஏறத்தாழ மூன்று மடங்கு நெல் விவசாயிகளால் உற்பத்தி செய் யப்படுகின்றது. ஆனாலும் தென்னி லங்கையைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் நெல்லைக் கொள்வனவு செய்து கொண்டு சென்று பியர் உற்பத்திக்காக நிறுவனங்களுக்கு விற்பதுடன் மிகுதியை மீண்டும் வடபகுதிக்கு அதிக விலைக்கு விற்பனை செய்கின்றார்கள்.

இதனால் வடமாகாணத்தில் நெல்லின் விலை அதிகமாக உள்ளது. இதன் காரணங்களால் அரிசியின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பால் வறுமையின் பிடியில் சிக்கியுள்ள மக்கள் அரிசியை கொள்வனவு செய்ய முடியாத நிலைமை காணப்படுகின்றது.

வடமாகாணத்தில் அரிசி தட்டுப்பாடு இல்லாத நிலையை பேணுவதற்கும் மக்களின் உண வுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும் நெல் உற்பத்தியா ளர்களுக்கு உரிய விலை கிடைப் பதை உறுதி செய்யும் வகையி லும் பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெல்லை முழுமையாகக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். (நி-8-30)

# அச்சுறுத்திய சாரத்தியம் கடும் நடவடிக்கைக்கு பணிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வழித்தடத்தில் நேற்று முன்தினம் தனியார் பேருந்து ஒன்று சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பில் சமூக ஊடகங்களில் பரவலாக காணொளிகள் பகிரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இவ்வாறான சாரத்தியத்துக்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு, வடக்கு மாகாண தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தவிசாளர் க.மகேஸ்வரனை வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கு அமைவாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-8-33)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3284

### தக்ஷயன்




### டிலானி




### நிதுஜா




### அரவிந்தன்




### டினோஜன்




### சிலோமியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 668





மறவாமல் நினைவு வைத்துக் கொள்ள, உங்கள் எல்லோரைக் காட்டிலும் எனக்குத் தான் காரணம் அதிகம் உண்டு. இல்லை நான் மறக்கவில்லை. சென்ற மூன்று ஆண்டுகளாக அல்லும் பகலும் நான் வேறு எதைப் பற்றியும் சிந்தித்ததில்லை.

நாம் எடுத்துக்கொண்ட சபதத்தின்படி பழி வாங்குவதற்குச் சமய சந்தர்ப்பங்களையும், தந்திர உபாயங்களையும் தவிர வேறு எதையும் பற்றி நான் எண்ணியதில்லை. எங்கே சென்றாலும், என்ன காரியம் செய்தாலும், யாரிடம் பேசினாலும் நமது நோக்கம் நிறைவேறுவதற்கு அதனால் உபயோகம் உண்டா என்பதைத் தவிர வேறு நினைவு எனக்கில்லை.

சமய சந்தர்ப்பங்கள் இப்போது கூடியிருக்கின்றன. சோழ நாட்டுச் சிற்றரசர்களும் பெருந்தர அதிகாரிகளும் இரு பிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். பழுவேட்டரையர், சம்புவரையர் முதலானோர் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட முடிவு செய்து விட்டார்கள். கொடும்பாளூர் பூதி விக்கிரமகேசரியும், திருக்கோவலூர் மலையமானும் அதற்கு விரோதமாயிருக்கிறார்கள். பூதி விக்கிரமகேசரி தென்திசைச் சைன்யத்துடன் தஞ்சை நோக்கி வருவதாகக் கேள்விப்படுகிறேன். திருக்கோவலூர் மலையமான் படை திரட்டி வருவதாகவும் அறிகிறேன். இருதரப்பாருக்கும் எந்த நிமிஷமும் யுத்தம் மூழலாம்."

"தேவி! அப்படி யுத்தம் மூழாதிருப்பதற்குத் தாங்கள் பெரு முயற்சி செய்து வருவதாகக் கேள்வியுறுகிறோம். கடம்பூர் சம்புவரையன் மாளிகையில் சமரசப் பேச்சு நடக்கப் போவதாக அறிகிறோம்."

"ஆமாம் அந்த ஏற்பாடு செய்திருப்பது நானேதான். ஆனால் என்ன காரணத்திற்காக என்று உங்களால் ஊகிக்க முடியவில்லையா?"

முடியவில்லை. ராணி! ஒரு பெண் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டுபிடிக்க சர்வேசுவரனாலும் முடியாது என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் எங்களால் எப்படி முடியும்?"

"அது உங்களால் முடியாத காரியந்தான். நான் சொல்கிறேன், தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய சபதம் நிறைவேறுவதற்கு முன்னால் சோழ ராஜ்யத்தில் இந்த உள்நாட்டுச் சண்டை மூண்டால், அதன் விளைவு என்ன ஆகும் என்று சொல்ல முடியாது சுந்தர சோழன் இன்னும் உயிரோடிருக்கிறான் அன்பில் பிரமமராயன் ஒருவனும் இருக்கிறான் இவர்கள் தலையிட்டு இருகட்சிக்காரர்களையும் அடக்கிவிடுவார்கள். அல்லது ஒரு கட்சி தோற்று, இன்னொரு கட்சி வலுத்துவிட்டாலும் நமது நோக்கம் நிறைவேறுவது அசாத்தியமாகிவிடும், அதற்காகவே இந்தச் சமாதானப் பேச்சை இப்போது தொடங்கியிருக்கிறேன். சண்டை உண்மையாக மூழுவதற்குள்ளே நம் நோக்கத்தை நிறைவேற்றிவிட வேண்டும். அப்படி நிறைவேற்றிய பிறகு சோழ ராஜ்யத்துச் சிற்றரசர்களுக்குள் மூழும் சண்டைக்கு முடிவேயிராது. இரு கட்சியாரும் சர்வநாசம் அடையும் வரையில் சண்டை நடந்து கொண்டேயிருக்கும். இப்போது தெரிகிறதா...சமாதானப் பேச்சு தொடங்கியதன் காரணம்?"

இதைக் கேட்டதும் அங்கே சூழ்ந்து நின்றவர்கள் எல்லாருடைய முகங்களிலும் வியப்புக்கும், உற்சாகத்துக்கும் அறிகுறிகள் காணப்பட்டன. பழுவூர் இளையராணியின் மதிநுட்பத்தை வியந்து அவர்கள் ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டார்கள். ரவிதாஸனுக்கும் ஆச்சரியப்படாமலிருக்க முடியவில்லை.


"தேவி! தங்களுடைய அபூர்வமான முன்யோசனைத் திறனை வியக்கிறோம். சமாதானப் பேச்சின் கருத்தை அறிந்து கொண்டோம். ஆனால் சபதம் நிறைவேறும் நாள் நெருங்கி விட்டது என்கிறீர்கள், அதை நடத்துவது யார்?

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பெருமாளும் சதாசிவமும்



ஓர் ஊரில் சதாசிவம் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு அண்ணன்மார் இருவர் தம்பி ஒருவன். தந்தை இறந்தபின் உடன் பிறந்தவர்கள் அவர் தேடி வைத்த செல்வத்தைப் பங்கு போட்டுப் பிரித்துக் கொண்டனர். தந்தையின் செல்வத்தில் ஒவ்வொருவனுக்கும் கால் பங்கு தான் கிடைத்தது.

அதே ஊரில் பெருமாள் என்ற ஒருவன் இருந்தான். அவன் சதாசிவத்தின் நண்பன். அவனுக்கு அண்ணன் தம்பியருடன் இல்லை. அவன் தந்தை சதாசிவத்தின் தந்தையளவு செல்வம் படைத்தவர் அல்லர். இருந்தாலும் அவர் தேடி வைத்த செல்வம் முழுவதும் பெருமாளுக்கே உரிமையாயிற்று. ஆகையால் பெருமாள் சதாசிவத்தைக் காட்டிலும் பெரும் பணக்காரனானான்.

பெருமாளைப் பார்க்கும் போதெல்லாம் சதாசிவத்துக்குத்தான் குறையுடையவன் என்ற எண்ணம் தோன்றும்.

பெருமாளைப் போல் தனிமகனாகப் பிறந்திருந்தால் தனக்குத் தன் தந்தையின் செல்வம் முழுவதும் சேர்ந்திருக்கும். தான் பெரும் பணக்காரனாகியிருக்க முடியும் என்று எண்ணினான் சதாசிவம். நண்பன் என்ற முறையில் அவன் ஒரு நாள் பெருமாளைச் சந்தித்து வரச் சென்றான்.

பெருமாள் படுத்திருந்தான். சதாசிவம் அருகில் சென்றபின் தான் அவன் நோயுற்றுப் படுத்திருக்கிறான் என்று அறிந்தான்.

சதாசிவம் ஆதரவான குரலில் பெருமாளை நோக்கி, "மருந்து வாங்கிச் சாப்பிட்டீர்களா?" என்று கேட்டான்.

"மருந்து வாங்கி சாப்பிடத்தான் வேண்டும். என்னால் எழுந்து நடக்க முடியவில்லை. வீட்டில் துணைக்கு ஒருவரும் இல்லை..." என்று சொல்லிக் கலங்கினான் பெருமாள்.

"கலங்காதீர்கள், இதோ நான் போய் மருத்துவரை அழைத்து வருகிறேன்" என்று சொல்லி சதாசிவம் விரைந்து சென்றான்.

மருத்துவர் வந்து பார்த்து, மருந்து கொடுத்துச் சென்றார். அதன்பின் பெருமாள் சதாசிவத்தை நோக்கி, "நண்பரே, அண்ணன் தம்பியரோடு பிறந்த நீங்கள், என்னையும் உங்கள் உடன் பிறந்தவன் போல பாவித்துச் செய்த உதவியை நான் மறக்கமாட்டேன்" என்று கூறினான்.

தான் அண்ணன் தம்பியருடன் பிறக்கவில்லையே என்ற குறை அவன் பேச்சில் வெளிப்பட்டது. அதைக் கேட்டு சதாசிவம் உருகிப் போனான்.

கருத்துரை:- உடன் பிறப்பில்லாத வாழ்வு சிறந்ததாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால கற்பனையான உணர்வுகளில் மூழ்கிக் கிடப்பது நிகழ்கால அமைதியைக் குலைத்து விடுகிறது. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கூட்டுறவுத் துறைக்கு மறுவாழ்வு கொடுங்கள்

மாற்றத்தையும் மாற்று வழியையும் கருத்தில் எடுக்காத எந்த மனித சமூகத்துக்கும் முன்னேற்றம் என்பது ஒருபோதும் சாத்தியமாகாது.

ஆம், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல. காலவகையாலே என்கிறது நம் தமிழ்.

ஆக, காலசூழ்நிலைகளுக்கேற்ப புதியனவற்றைப் புகுத்துதல் அவசியம் என்பதை தமிழ் மொழி எடுத்துக்கூறியுள்ளது. உண்மையில் இதையிட்டு நாம் பெருமை கொள்ள வேண்டும்.

அந்தவகையில் நம் முன்னவர்கள் எங்கள் மக்கள் சமூகத்தின் நன்மை கருதி கூட்டுறவு அமைப்பை ஆரம்பித்தனர்.

நம் முன்னவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் ஊர்கள் தோறும் சங்கக்கடைகள் மூலமாக மிக உன்னதமான சேவைகளை வழங்கின.

அதிலும் கலாநிதி என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்த காலத்தில் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டின்போது, அத்தியாவசிய உணவுப் பொருட்களை பொதுமக்களுக்குப் பகிர்ந்தளித்தது தொடக்கம் அண்மையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மந்தம் வரையில் உணவுப் பொருட்களைப் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்குவது வரையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றிய பணியை நாம் ஒரு போதும் மறந்துவிடலாகாது.

சுருங்கக்கூறின் மேற்குறித்துரைத்த இக்கட்டான சூழ்நிலைகளின்போது பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த வேறு எந்த அமைப்பாலும் மிக உன்னதமான பங்கீட்டு நடைமுறையைச் செய்திருக்க முடியாதென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இவ்வாறு எங்கள் மக்கள் இன்னல்பட்ட போதெல்லாம் ஏழை, பணக்காரர் என்ற பேதமை பாராது, அனைவருக்கும் பங்கீடு என்ற அறம் சார்ந்த நடைமுறையைப் பின்பற்றி நுகர்வுப் பொருட்களை வழங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது தளர்ந்து தள்ளாடி நிற்பதைக் காணும்போது மிகுந்த வேதனையாகவுள்ளது.

இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் கூட்டுறவுச் சங்கங்களுக்குள் நுழைந்த சில பெருஞ்சாளிகள் என்பதற்கு அப்பால், காலமாற்றங்களுக்கு ஏற்ப தம்மைப் பலப்படுத்தவும் நவீன முறைமைகளை உள்வாங்கவும் எமது கூட்டுறவுச் சங்கங்கள் தயாராக இருக்கவில்லை.

இதன் காரணமாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவீனப்பட்டு போயுள்ளன.

எனினும் அவற்றின் பலவீனம் குறித்து நாம் கவனமற்றவர்களாக இருக்கின்றோம்.

உண்மையில் கூட்டுறவுச் சங்கங்கள் எங்கள் இனத்தின் தேசிய சொத்து. அவற்றைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானது.

எனவே சமகாலத்துக்கேற்ப ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் புதிய எண்ணக்கருவுடன் எழுச்சி பெற வேண்டும்.

ஆம், பத்து வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தென்னந் தோட்டங்களைக் கொள்வனவு செய்து தென்னஞ்செய்கையில் ஈடுபட வேண்டும், பசுவளர்க்கும் பெருந்திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்றெல்லாம் எழுதியிருந்தோம். ஆனால் அதுபற்றி எவரும் கருசனை கொள்ளவில்லை.

பரவாயில்லை. இனியேனும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மறுவாழ்வு வழங்குங்கள் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# புலிகள் காடு மாறினாலும் அதன் புள்ளிகள் மாறாது

## அரசை எச்சரிக்கிறார் சுமண தேரர்

புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளி மாறாது. மஹிந்தவைப் பாதுப்பது எமது இனத்தின் கடமை. அநுர தலைமையிலான அரசு வடக்கு - கிழக்கில் உள்ள சில இராணுவப் பாதுகாப்பு அரண்களை நீக்கியுள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி சூழ்ச்சி நடக்கலாம். எனவே பாதுகாப்புத் தரப்புகள் விழிப்பாக இருக்க வேண்டும் என அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்மேலும் கூறியதாவது; மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தான் நந்திக் கடலில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

இதனால் சர்வதேச ரீதியில் அவர் எதிர் கொண்ட அழுத்தங்கள் ஏராளம். போர் இவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டாலும் எமது நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்கூட இதன் ஓர் அங்கம் தான். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டதால் மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்று எவராலும் கூறமுடியாது.

எனவே மஹிந்தவைப் பாதுகாக்க வேண்டியது எமது சிங்கள இனத்தின் கடப்பாடாகும். 76 ஆண்டு கால சாபத்துக்கு முடிவு கட்டத்தான் அநுரவை ஜனாதிபதியாக்கினார்கள்.

எனவே அவரின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி மாளிகைப் பகுதிகளில் உள்ள வீதிகளில் இருந்த பாதுகாப்பு நீக்கப்பட்டதன் நோக்கம் என்ன? யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் இருந்த இராணுவப் பாதுகாப்பு அரண்கள் நீக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைச் சிலர் தவறாகப் பயன்படுத்திச் சூழ்ச்சி செய்கின்றனரா என்பது பற்றிப் பாதுகாப்புத் தரப்பினர் விழிப்பாக இருக்க வேண்டும். ஏனெனில் புலிகள் காடு மாறினாலும் அதன் உடலில் உள்ள புள்ளிகள்மாறாது என்பார்கள்.

ஜனாதிபதி செயலக வீதிகளைத்திறக்க முடியும் என்றால், திவுலபத்தான வீதியை ஏன் திறக்க முடியாது? என்று அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் கேள்வியெழுப்பினார். (ந-7)

## தூதுவர்களை அழைத்ததில் - துரிதம் மீள் நியமனத்தில் மாத்திரம் - மந்தம்

பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகளின் தூதரகங்களில் இலங்கைத் தூதுவர்கள் நியமிக்கப்படாமல் வெற்றிடமாகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னதாக ஐக்கிய நாடுகளின் நிரந்தரத் தூதுக்குழு, பிரித்தானியா, இந்தியா, அவுஸ்திரேலியா, ரஷ்யா, ஜப்பான், இந்தோனேசியா, மலேசியா, நேபாளம், பிரேசில் மற்றும் 20 நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள் நாட்டிற்குத் திரும்ப அழைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் அந்த நாடுகளுக்கான தூதுவர்களோ, உயர்ஸ்தானிகர்களோ இன்னமும் மீள நியமிக்கப்படவில்லை.

முக்கிய நாடுகளுக்கான தூதுவர்களை நியமிக்கும் செயற்பாடு மந்தகதியில் இடம்பெறுவதன் காரணமாக, பதில் தூதர்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கானத் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் வெளிநாடுகளின் துணைத் தூதரகப் பொது அலுவலகங்கள் 60 இற்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ள நிலையில் 20 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இதுவரை தூதுவர்கள் நியமிக்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ந-7)

அரச வங்கியில் வேலை

## ஆசை காட்டி ரூ.15 இலட்சம் மோசடி; ஒருவர் கைது

அரச வங்கியொன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரிடம் 15 இலட்ச ரூபாவைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் யாழ். விசேட குற்ற விசாரணைப் பிரிவினால் அரச வங்கியொன்றின் முன்னாள் முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, பிரஸ்தாப நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு தான் கடமையாற்றிய வங்கியில் வேலை வாய்ப்பினைப் பெற்றுத் தருவதாகக் கூறி 15 இலட்ச ரூபாய் பணத்தினைப் பெற்றுள்ளார்.

பணத்தினைப் பெற்று நீண்ட காலமாகியும் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்காததால் பாதிக்கப்பட்ட இளைஞன் பணத்தினை மீளக் கோரியுள்ளார். அதனால் முன்னாள் முகாமையாளர் 15 இலட்ச ரூபாய் பணத்திற்கான காசோலையை வழங்கியுள்ளார்.

காசோலையை இளைஞன் வங்கியில் வைப்பிலிட்ட போது காசோலை திரும்பியுள்ளது. அதை அடுத்து இளைஞன் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ் பிரிவிடம் முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் முன்னாள் முகாமையாளர் தலைமறைவாகியிருந்தார்.

அந்நிலையில் தொடர் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை அவரைக் கைது செய்ததோடு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

அரச நிறுவனங்கள் மீதான

## இணையவழித் தாக்குதலை தடுக்க விசேட திட்டம்

அரச நிறுவனங்களை இணையவழித் தாக்குதல் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பதற்காக அரச ஊழியர்களிடையே இணையப்பாதுகாப்பு விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கான திட்டங்களை இலங்கை கணினி அவசர காலப் பதிலளிப்புக் குழு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து இலங்கை கணினி அவசரகால பதிலளிப்புக் குழு அறிவித்துள்ளதாவது,

அரசாங்க வலைத்தளங்கள் மற்றும் கணினி அமைப்புகளைக் குறிவைத்து நடத்தப்படும் இணையத் தாக்குதல்களால் ஏற்படும் தொடர்ச்சியான அபாயங்களைத் தவிர்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் தாக்குதலுக்குள்ளான கட்டமைப்புகளை மீட்டெடுப்பது வருடாந்தச் செலவுகள் அதிகரிப்பதற்குக் காரணமாகின்றது. இதனால்பொது மக்கள் நிதி கணிசமாக வீணாகின்றது.

ஆகவே அரச நிறுவனங்கள் முழுவதிலும் இணையப் பாதுகாப்பை வலுப்படுத்த ஒரு விரிவான உத்தி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சம், அரச ஊழியர்களின் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்துதல், இணைய அச்சுறுத்தல்களைத் திறம்படக் குறைப்பதற்கான அறிவு மற்றும் திறன்களுடன் அவர்களை வலுவூட்டல் என்பனவாகும்.

பல்வேறு அரச துறைகளுக்கான விழிப்புணர்வு அமர்வுகளுடன் இந்தத் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டுக்குள் மேலும் பல நிறுவனங்களுக்கு இப்பயிற்சிகளை விரிவுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். (ந-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# உயர்நீதிமன்றம் வழங்கிய சரித்திர தீர்ப்பு!

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்

அத்துடன் பதிலளிப்பவரின் சேவைகள் வழங்கும் அந்த இரண்டு கோவில்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்பதையும் அறியமுடிந்தது.

ஆவணப்படுத்தப்பட்ட வழக்கின் பதிவு, அதாவது மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தின் பதிவாளரால் இந்த நீதிமன்றத்திற்குக் கிடைக்கப் பெறும்படி உருவாக்கப்பட்ட வழக்கு மேலுள்ளதை, உறுதிப்படுத்துகிறது.

27. நீதிமன்றம், பிரதிவாதியிடம் வினவியபோது அதாவது மினுவாங்கொடை நீதிமன்றம் ஒரு ஒருங்கிணைந்த நீதிமன்றமாக இருந்தது என்பது தொடர்பாக விழிப்புணர்வுடன் இருந்தீரா என வினவியபோது, பதிலளித்தவர் எதிர்மறையாக விடைபகிர்ந்தார். மெய்நிகர் புகார் அளிப்பவர் தவறான வழக்கு இலக்கத்தை வழங்கி, அவர் ஒரு செயலுக்காக நடவடிக்கை எடுத்தது போன்ற தோற்றத்தை உருவாக்கியுள்ளார். நீதிமன்றத்தின் கட்டமைப்பைப் பற்றி எந்த யோசனையும் இல்லாமல் அவரது வாடிக்கையாளரை மிக மோசமாக ஏமாற்றுதல் மேற்கொண்டார்.

28. இந்தச் சூழலில், மினுவாங்கொடை வழக்கு தொடர்பாக இந்த நீதிமன்றத்தின் முன் பிரதிவாதியின் ஆரம்ப நிலைப்பாடு, தாம் சம்பந்தப்பட்டதை மறுத்து அல்லது அது தொடர்பான அறிவுறுத்தல்களைப் பெற்றதை கவனத்தில் கொள்ளாது மறுத்தது, ஒரு தீவிரமான புறக்கணிப்பு மற்றும் நீதி மன்றத்தை தவறாக வழிநடத்துவதற்கு அண்மித்ததாக நான் குறித்துக் காட்டுகின்றேன்.

29.மேலும் நான் மேலே உள்ள தவறுக்கு கவனத்துடன் எழுதும் போது சுட்டிக்காட்டுவது பதிலளிப்பவர் வழக்கறிஞர்கள் பராமரிக்க வேண் டிய முறையான பதிவேடுகளைப் பராமரிக்கவில்லை என்று விசாரணையின்போது மேலும் வெளிப்படுத்தப்பட்டது. பதில் அளித்தவர் ரூ. 50,000/- தொகையினை மதிப்பீட்டு நோக்கத்திற்காக பெற்றுக்கொண்டார் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும். அத்துடன் இந்த தொகைக்கான சிட்டையினையும் அவர் வழங்கியிருந்தார். எனினும், அது மதிப்பீட்டுக்கு ரூபாய் 15000 மட்டுமே வழங்கப்பட்டதாக பதிவுகள் உள்ளன. பதிலளிப்பவர் தாம் மதிப்பீட்டாளருக்கு அல்லது மதிப்பீட்டுக்கான தொகையாக ரூ.30,000/- அல்லது ஏதேனுமொரு தொகையினை செலுத்தியதாக தெரிவித்தார். நீதிமன்றம் மேலும் கேள்வி எழுப்பிய போது இது தொடர்பாக பதிலளித்த அவர், தாம், அவரது வாடிக்கையாளர்களுடன் தொடர்புடைய வேறான தனிக்கணக்குகளை பேணுவதில்லை என்பதை ஒப்புக் கொண்டார். உண்மையில், பதிலளிப்பவரிடம் வழக்கறிஞர்களின் கணக்குகள் போன்ற முறையான பதிவுகள் கொண்ட ஒரு தொழில்முறை நாட்குறிப்புகூட இருக்கவில்லை.

30. வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து பணங்களும் அதாவது

மதிப்பீட்டாளருக்கு அல்லது தொழில் வல்லுநர்கள்- வாண்மையாளர்களுக்கு வழங்குவதற்காகவும் மற்றும் எழுது கருவிகள் உட்பட பிற நோக்கங்களுக்காக பத்திரப்படுத்தி வைக்கப்பட்டவை நம்பிக்கையின் அடிப்படையில் வழக்கறிஞர்களால் நடத்தப்படுகின்றன. மற்றும் அத்துடன் அவை பொருத்தமற்றதாக இருக்கக்கூடாது அல்லது தங்கள் சொந்த நோக்கங்களுக்காக, நேர்மையற்ற முறையில் அல்லது வேறுவிதமாக தவறாகப் பயன்படுத்தப்படக்கூடாது - உபயோகிக்கக்கூடாது -கையாளுதல் கூடாது. இதுபோன்ற விரோதமான கையாடலைத் தவிர்ப்பதற்கு பயன்படுத்துதல், அத்துடன் அவரது அல்லது அவளது சொந்த நலன்களைப் பாதுகாத்தல், வழக்கறிஞர்கள் வாடிக்கையாளர்களுடனான அவர்களின் நிதி பரிவர்த்தனைகள் தொடர்பான சரியான கணக்குகளை பேணிப்பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும். இது ஒரு வெறும் கொள்கை அல்லது முன்னெச்சரிக்கை அல்ல, மாறாக அனைத்து வழக்கறிஞர்களின் தொழில்முறை கட்டாயக் கடமையாகும். தொழில்முறை நாட்குறிப்பைப் பராமரிக்கவோ? அல்லது எளிய நிதிக் கணக்குகளை முறையாக செய்ய முடியாத ஒரு வழக்கறிஞரை விட திறமையின்மைக்கு ஒரு தெளிவான அறிகுறி இருக்க முடியுமா?

31. In Re H.A. Mahinda Ratnayake, Jayantha Jayasuriya, PC, CJ observed, ரீ எச்.ஏ. மஹிந்த ரத்நாயக்க, ஜயந்த ஜயசூரிய, பி.சி., சி.ஜே.கவனித்துக்கொண்டது.

"இது மனிதர்களுடைய நற்பெயர் நாமம்- புகழ்நாமம் மற்றும் அறிவு வாண்மை மற்றும் திறன்" கொண்ட நீதித்துறையின் 40(1) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள சட்டத்தின் பிரகாரம் சட்டத்தரணிகளாக அனுமதிக்கப்பட்ட நபர்களால் முடியும். எனவே, ஒரு வழக்கறிஞராகச் சேர்ந்த பிறகு நல்ல பெயர் பெற்றவர் அவரது குணத்தின் -நடத்தையின் தரத்தை மாற்றினால் பிறகு அவரை நற்பெயர் பெற்றவர், ஒரு மனிதனாக எக்காலத்திற்கும் ஆக்கமுடியாது. நீதித்துறைச் சட்டம் மற்றும் உச்ச நீதிமன்ற விதிகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கை அமைவாக அத்தகைய நபர் ஒழுக்கமீறல் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்."

32. இதேபோல், ஒரு மனிதனுடைய நற்பெயர் நாமம்- புகழ்நாமம் மற்றும் அறிவு வாண்மை மற்றும் திறன் அவர்களாகவே அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் திறமையான அறிவுடைய ஒரு நபராக அவர்களின் குணத்தின் தரம் மற்றும் திறன் மாற்றங்கள் அவர்களாகவே அவ்வாறு நடந்து கொள்கிறார்கள், நீதி மற்றும் தொழிலின் நலன்கள் கோரும் அத்தகைய நபர்களை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும்.

33.வழக்கறிஞருக்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான உறவு நம்பிக்கைக்குரிய ஒன்றாகும். அத்துடன் சட்டமும் சமூகம் கருதும் இந்த நம்பிக்கை உயர்வாக உள்ளது- ஆகவே தான் அவர்கள் கூறுகிறார்கள் மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கும் எதையும் மறைக்கக் கூடாது என்று. நிகழ்நிலை முறைப்பாட்டாளரால் பதிலளிப்பவர் மீது நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது. அது அவரது சாட்சியத்தில் மிகவும் தெளிவாக வெளிப்பட்டது. விசாரணையில்கூட, வண. தேரோ, பதிலளிப்பவரை பின்வருமாறு தொடர்ந்து கூறினார்:

(Apé Mahattaya, which roughly translates to 'our sir'). தோராயமாக "எங்கள் சார்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது).

34. இந்த வழக்கில், பதிலளிப்பவர் இந்த நம்பிக்கையை முற்றிலுமாக மற்றும் பூரணமாக மீறி அலட்சியமாக நடந்துகொண்டுள்ளார். எமக்கு முன் வைக்கப்பட்டுள்ள சான்றுகள் பிரதிவாதியை ஏமாற்றிவிட்டதாக மற்றும்/ அல்லது மெய்நிகர் புகார்தாரரின் நிதியை மெய்நிகர் புகார்தாரர் ஆகிய அவரது பதிவு செய்யப்பட்ட வழக்கறிஞர் (அவர் மீதான நம்பிக்கையை மீறி) நம்பிக்கைக்குத் துரோகமாகத் தவறாகப் பயன்படுத்தினார் என்பது உறுதிப்படுத்துகிறது.

The evidence led before us sufficiently establishes the Respondent to have cheated and/or misappropriated the Virtual Complainant's funds in breach of the trust reposed upon him by the Virtual Complainant as his Registered Attorney.

அதன்படி, நான் அவரை ஏமாற்றுக் குற்றவாளியாகக் காண்கிறேன். எவ்வாறாயினும், அது தவறான நடத்தையின் கண்டுபிடிப்புக்களாகவரும்போது அது குற்றவியல் குணாதிசயமாகும். இது போன்ற கண்டுபிடிப்புகளின் சூழமைவை இந்த வகையான நடவடிக்கைகளில் இந்த நீதிமன்றம் கருத்தில் கொண்டுள்ளவற்றுடன் சரியாகக் கட்டாயம் புரிந்து கொள்ளவேண்டும்.

35. இந்த முடிவுக்காக, அமரசிங்க ஜே தர்மிக்கா சந்திரதிலக எதிர் சுசந்த மஹேஸ் மூனசிங்க அவதானிப்புகளை மேற்கோள்காட்டுவது பொருத்தமானதாகும் என நான் நம்புகின்றேன்-காண்கிறேன்.

"இந்த நீதிமன்றத்தின் ஒழுங்குமுறை அதிகார வரம்புக்கு ஏற்ற ஒரு நபரை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு இணக்கமானதாக மாற்ற ஒரு குற்றத்திற்கான தண்டனை அவசியமுமில்லை அல்லது மாறாமல் ஒரே மாதிரியாக — எப்போதும் போதுமானதாகவும் இல்லை.

இது ஒரு பொருத்தமற்றது விடயம் அல்ல, ஒரு குற்றத்திற்கான தண் டனை என்பது முதல் பார்வை,- மாத்திரத்தில் இல்லாதுபோல தோன்றினாலும் பின்னர் குற்றமாகலாம், இருப்பினும் முதல் பார்வையில் இந்த நீதிமன்றம் ஒழுக்காற்று நடவடிக்கைகளில் செயற்பட வேண்டியதன் காரணம் அமைகிறது. ஒரு நபரை ஒழுக்காற்று சட்ட நடவடிக்கைகளுக்கு வழிப் படுத்தக்கூடிய தொழில்சார்ந்த நடத்தை எது என்பதை தீர்மானித்தல் நீதிமன்றத்திற்கு பரந்த அதிகார வரம்பு உள்ளது.




இது இருக்கலாம் தொழில்சார்பற்ற நடத்தையின் உண்மைகளை நிறுவுவதாக இருக்கலாம். அவ்வாறாயின் அது ஒரு குற்றவியல் வழக்கின் அடித்தளமாகவும் இருக்கலாம், கடந்த, நிகழ்கால அல்லது வரவிருக்கும் காலங்களாக இருப்பினும், இங்கு முடிவு செய்வது தேவையற்றது, அத்துடன் நான் முடிவு செய்யவில்லை என்பதை தெளிவுபடுத்துங்கள் நான் விரும்புகிறேன். என்பதை உறுதி செய்வதற்காக, தண்டனைச் சட்டத்தின் 388 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி நிரூபிக்கப்பட்ட உண்மைகள் அளவுகோல்களை பூர்த்தி செய்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக மற்றும் சட்ட ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பாக தொழில்நுட்பம் அல்லாத, பிரபலமான, பொருட்கோடல் ஒன்றை நான் காண்கின்றேன், —uti loquitur vulgus— பொதுவாக - வழக்கமாக வழக்கறிஞர்களால் இந்த சொற்றொடருக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப அர்த்தத்தை விட, குற்றவியல் நம்பிக்கை மீறல் என்பதை தீர்மானிப்பதில் மிகவும் பொருத்தமானது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது.

36. நீதியரசர் மேலும் அவதானித்துக்கொண்டது: ஒழுக்ககுணத்தில் குற்றவியலாக இருக்கும் தவறான நடத்தை உடைய ஒரு வழக்கறிஞர். அவரது தொழிலைத் தொடர்வதா இல்லையா, (இந்த நீதிமன்றம் உறுதிப்படுத்தியதை விட தண்டனைச் சட்டத்தின் பிரிவு4 படி பரந்த அதிகாரங்களைக் கொண்டுள்ளது), பெயர் பட்டியலிலிருந்து நிக்கப்படலாம், தொழில் நடைமுறையில் இருந்து இடைநீக்கம் செய்யப்படலாம், கண்டனம் செய்யப்படலாம். அறிவுரை அல்லது கண்டனத்தோடு எச்சரிக்கை செய்யப்படலாம் என்றாலும் தகுதி வாய்ந்த குற்றவியல் அதிகார வரம்புடைய நீதி மன்றத்தின் முன் அவ்ரை அழைத்தும் வரவில்லை என்றால் மற்றும் குற்றவாளி மற்றும் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது என்று காட்ட எதுவும் இல்லை.

40. மேலே குறிப்பிடப்பட்ட வழக்கில் பிரதிவாதிக்கு எதிரான சட்டவிதி- அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது குறிப்பாக "கிரிமினல்-குற்றவியல் நம்பிக்கை மீறல்" மற்றும் ஏமாற்றலும் ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வன்...

முன்பாக (12.11.2024) கொழும்புத் துறையிலுள்ள வேட்பாளர் ஒருவரது வீட்டுக்குச் சென்று வேட்பாளரது தந்தை மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் பிரஸ்தாப நபரை பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் அதே தினத்தில் மேலும் மூன்று வீடுகளை அடித்து உடைத்து சேதப்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ந-7)



















## போதைப்...

சம்பவத்தில் 41 வயதுடைய பெண் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநபரிடம் இருந்து 5 ஆயிரத்து 830 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஆயிரத்து எழுபது மில்லிக்கிராம் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவரிடம் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-7)

## முன்னாள் ஜனாதி...

உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குச் சந்தையில் நிலவும் தட்டுப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும்.

அரசியலில் இருந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் போலியான பல குற்றச்சாட்டுக்களைத் தற்போது முன்வைக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டமை தற்போதைய பிரதான பேசுபொருளாகக் காணப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தலும் கிடையாது என்று புலனாய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னரே அவர்களுக்கு வழங்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு 60 பொலிஸார் என்ற அடிப்படையில் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

புலனாய்வின் அடுத்த மீளாய்வு அறிக்கையில் பாதுகாப்பு மேலும் குறைக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டால், வழங்கப்பட்டுள்ள 60 பொலிஸாரின் பாதுகாப்பை 30 ஆகக் குறைக்கலாம்.

மக்களின் வரிப்பணத்தை விரயம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதிகளின் உயிருக்கு அச்சுறுத்தல் என்று ஊடகங்களில் குறிப்பிட்ட தரப்பினர்கள் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான தகவல்களைப் பாதுகாப்புத் தரப்புக்கு அளிக்க வேண்டும். அப்போதுதான் அது குறித்து உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## அநுரவின்...

சிங்க தெரிவித்தார்.

இலங்கையின் சம கால அரசியல் நிலைவரம் தொடர்பில் இந்தியாவிலிருந்து சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் முன்னெடுத்த வேலைத் திட்டங்களையும், நான் ஆரம்பிக்கவிருந்த அபிவிருத்திகளையும் முன்கொண்டு செல்ல தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

அதனை அவர், தனது உத்தியோக பூர்வ முதலாவது வெளிநாட்டுப் பயணமான இந்திய விஜயத்தின்போது வெளிப்படுத்தியுள்ளார்.

நாட்டின் நலன் கருதிய அநுர குமாரவின் செயற்பாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்படுவார் என்றும் நான் நம்புகின்றேன்.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை முழுமையாகத் தீர வேண்டும். அபிவிருத்தி முழுமை பெற வேண்டும். அதன்பின்னர் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமாக இருக்கும்.

ஜனாதிபதி அநுரகுமார உறுதியளித்ததன் பிரகாரம் 2025 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும். எக்காரணம் கொண்டும் இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது.

அதேவேளை, கடந்த ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் காலங்களில் அநுர குமார வழங்கிய சகல வாக்குறுதிகளையும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் அவர் மீது இலங்கை மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் முழு நம்பிக்கை ஏற்படும் என்றார். (ந-7)

## 750...

தனியார் பேருந்து உரிமையாளரின் பயண அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப் பட்டுள்ளதாக வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் க.மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கு அறிவித்துள்ளார்.

தனியார் பேருந்து மேற்படி வழித்தடத்தில் சாரத்திய நடைமுறைகளை மீறி பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பயணித்தமை தொடர்பாக சமூக ஊடகங்களில் காணொலிகள் பகிரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு, வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவருக்கு வடக்கு மாகாண ஆளுநர் அறிவுறுத்தியிருந்தார்.

இதற்கமைவாக முதல்கட்டமாக குறித்த தனியார் பேருந்தின் உரிமையாளரின் பயணிகள் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் சாரதி, நடத்துநர் மற்றும் சிற்றூர்தியின் உரிமையாளர் ஆகியோரை மேலதிக நடவடிக்கைக்காக உரிய ஆவணங்களுடன் அதிகார சபைக்கு சமுகமளிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ந-7)


*(இது தொடர்பில் முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## போக்குவரத்து...

களைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் பொலிஸாரால் விசேட போக்குவரத்துச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 8068 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். (ந-7)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீசாலையில்...

நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மீசாலைப் பகுதியில் வயோதிபப் பெண்மணி ஒருவர் தனிமையில் வசித்து வந்த வீட்டினுள் கடந்த 23ஆம் திகதி உட்புகுந்த திருடன் ஒரு சங்கிலி, ஒரு சோடி காப்பு, இரண்டு மோதிரங்கள் உள்ளிட்ட 08 பவுண் தங்க நகைகளையும், ஒரு தொகை அமெரிக்கன் டொலர்ஸ் பணத்தையும் திருடிச் சென்றுள்ளான்.

இது குறித்து, குறித்த பெண் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து. பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், ஒரு பகுதி நகைகள் மீட்கப்பட்டன. அத்துடன் சந்தேக நபரின் வாக்குமூலத்தின் அடிப்படையில், நகைகளை வாங்கிய மற்றைய நபரையும் பொலிஸார் கைது செய்து, குறித்த நபரிடம் இருந்தும் நகைகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இருவரையும் சாவகச்சேரி நீதவான் முன்னிலையில் முற்படுத்தியவேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ந-7)

## சட்டவிரோத...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

கடந்த அரசுகள் போல் இந்த அரசையும் எவரும்நினைத்துவிடக்கூடாது. இது குறுக்குவழியில் வந்த அரசு அல்ல. ஆட்சி மாற்றத்தை விரும்பிய மக்கள் அலையால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசே இது.

கடந்த ஆட்சிகள் போல் இந்த ஆட்சியில் சட்டவிரோத மதத் தலங்களுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கப்படமாட்டாது. கடந்த ஆட்சிகளில் சட்ட விரோத மதத் தலங்களே மத வன்முறைக்கு வழிவகுத்தன.

அது இறுதியில் இனவன்முறையாக வெடித்தது. அப்படியான அராஜக நடவடிக்கைகளை இந்த ஆட்சியில் எதிர்பார்க்க முடியாது.

குழப்பவாதிகள் எவரும் இருந்தால் அவர்கள் பாரபட்சமின்றி தண்டிக்கப்படுவார்கள்.சட்டம் தனது கடமையைச் சரிவரச் செய்யும் என்றார். (ந-7)

## மனிதவுரிமை...

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் நீதிபதி எல்.டி.பி.தெஹிதெனியவால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எழுத்துமூலமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அதில் அண்மையில் மியன்மாரில் இருந்து படகில் வந்த 115 அகதிகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டனர்.

கப்பலில் இருந்த 12 பணியாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்கள் முல்லைத்தீவு விமானப்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளிடம் விசாரணை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குழு கடந்த 26ஆம் திகதி முல்லைத்தீவு விமானப்படை முகாமுக்குச் சென்றிருந்தது.

குடிவரவு கட்டுப்பாட்டு நாயகத்தின் அனுமதியின்றி அகதிகளைப் பார்வையிட அனுமதி வழங்க முடியாது என விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளைச் சந்திக்க எவருக்கும் அனுமதி வழங்கக்கூடாது என குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகம் உத்தரவிட்டுள்ள நிலையில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் குறித்த கோரிக்கைக்கு பதிலளித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம், புகலிடக் கோரிக்கையாளர்களை அணுகுவதற்கு அனுமதி வழங்காமல் இருப்பது பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சரே எனத் தெரிவித்துள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் உதவிக் கட்டுப்பாட்டாளர் ஒருவரினால் வாய்மொழியாக இது தொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும் குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் இது தொடர்பில் எழுத்து பூர்வமாகத் தெரிவிக்கவில்லை எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

நீதிமன்ற உத்தரவின் மூலமோ அல்லது வேறு வகையிலோ தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்களைத் தொடர்ந்தும் பரிசோதிக்கும் அதிகாரம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமில் உள்ள அகதிகளில் 40 இற்கும் அதிகமானோர் சிறுவர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் கைக்குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பில் ஆராய வேண்டிய பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உண்டு என அக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, ஆணைக்குழுவின் அதிகாரிகள் தடையின்றி உரிய புகலிடக் கோரிக்கையாளர்களை சந்திப்பதற்கு வசதியாக தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்குமாறு முப்படைகளின் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. (ந-7)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீருற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை

(2873)

குரு

076 069 1105/ 076 298 1105

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1910)

076 825 7716 (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

01. பருத்தித்துறை, இந்து, 1991, புனர்பூசம், MBBS Doctor, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 33 737
02. திருநெல்வேலி, இந்து, 1987, ஆயிலியம், MBBS Doctor, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 34 953
03. பருத்தித்துறை - அச்சுவேலி, இந்து, 1991, சதயம், Graduate, Quantity Surveyor மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 27 903
04. புலோலி, இந்து, 1990, ரோகிணி, BBM finance MBA, Canada Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை Profile No - 27 898
05. மிருசுவில், இந்து, 1988, திருவோணம், BSc in Information Technology, Australia Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.Profile No - 32 307
06. சாவகச்சேரி - வேலணை, இந்து, 1990, திருவோணம், BBM B.Eng (University of Sunder Land) Germany Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 31 102
07. கோப்பாய், இந்து, 1982, சுவாதி, MBBS Doctor, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 31 058
08. வண்ணார்பண்ணை, இந்து, 1976, ரேவதி, MBBS Doctor, Divorce,UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
09. கரவெட்டி, இந்து, 1984, விசாகம், BCA (Bachelor of computer Application), Business, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. Profile No - 37 556

எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு சகல கோத்திரங்களையும் உடைய மணமகன், மணமகள் விரபங்களை பெற்றுக்கொள்ளலாம்.

(C-1913)

www.thaalee.com
S.Sharma J.P
Astrology
© - 077 539 3728
- 077 803 8193

## Sales Rep தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஐஸ்கிறீம் நிலையம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள Sales rep தேவை. வயது எல்லை : 25 - 35, சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் : யாழ்ப்பாணம். Stanley Road, Jaffna

(2854)

021 221 6660

## மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும்.

(C-1909)

தொடர்புகளுக்கு:
076 315 6470

## வேலையாட்கள் தேவை

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) (ஆண், பெண் இருபாலார் ) தேவை.

இடம் : யாழ்ப்பாணம்
தொ.இல : 077 158 0268
077 839 3974

அத்துடன் கொழும்பில் பணி புரிவதற்கு டிரைவர் (Driver) (ஆண்) மட்டும் தேவை. அத்துடன் கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்)

(679)

தொடர்புகளுக்கு :
077 839 3974

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979 ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரம் மேஷ ராசியில் பிறந்த மணமகளிற்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(689)

தொடர்புகளுக்கு :
077 413 4528

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (620)

075 033 6759

## HAPPY SUPERMARKET DELIVERY

உங்கள் Happy Supermarket Home delivery வடமராட்சி வாடிக்கையாளர்களிற்காக செவ்வாய்க்கிழமைகளில், 6000/= இற்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கு திங்கட்கிழமை 5 pm இற்கு முன் Whatsapp மூலமாக ஓடர்களை பதியவும்.

(690)

Happy Supermarket - Urumpirai
076 800 6500

## V2 VISA SERVICES
கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1911)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org